**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், இலுப்பூர்</u>**

**முன்னிலை: திருமதி, சாதத்துனிஷா, பி.ஏ. பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்

நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

2025 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04 ம் நாள் திங்கள் கிழமை

**<u>இடைநிலை மனு எண். 01/2024</u>**

**<u>IN</u>**

**<u>அசல் வழக்கு எண். 11/2024</u>**

நல்லம்மாள் .....மனுதாரர்/ வாதி

... எதிர் ...

1. சிலம்பக்கோனார்

2.ராசு

3.ஷேக் முகமது

..... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுவானது என் முன்பாக கடந்த 04.08.2025–ம் தேதியில் இறுதி விசாரணைக்காக வந்தபொழுது வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.V.S.பத்ரிநாத், அவர்கள் முன்னிலையாகியும், 1,2 பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.P.அழகர், அவர்கள் முன்னிலையாகியும், 3 ம் பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.முகமது அஜ்மல்கான், அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்..

**<u>உத்தரவு</u>**

இம்மனுவானது, மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் இந்த மனுவும் மனுச் சொத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ தடை,தகராறு செய்யக் கூடாது என இந்த அசல் வழக்கு முடியும் வரை அவர்களுக்கு எதிராக இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்க உத்தரவிட வேண்டி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ்

மனுத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**

மனுதாரர்/வாதி தரப்பில் மனுச் சொத்து சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், மனுதாரர் அவரது மகள் ஆவார் என்றும், மேற்சொன்ன சிட்டுப்பிள்ளைக்கு மனுச் சொத்து சுதந்திரத்திற்கு முன்பு பாத்தியப்பட்டு அவரது பெயரில் செட்டில்மென்ட் பதிவேடும் ஏற்பட்டுள்ளது என்றும், மேற்சொன்ன சிட்டுப்பிள்ளை ராமசாமி, சின்னம்மாள் ஆகியோரின் மகள் என்றும், அவர் கடந்த 2015ம் ஆண்டு அவரது மகளான மனுதாரருக்கு தான செட்டில்மென்ட் பத்திரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும், அது முதல் மனு சொத்தை மனுதாரர் அனுபவம் செய்து வருகிறார் என்றும், 1ம் எதிர்மனுதாரர் தாவா சொத்திற்கு சம்மந்தம் இல்லாதவர் என்றும், அவர் 3ம் பிரதிவாதிக்கு மனுச் சொத்தை கிரையம் ஏற்படுத்தியுள்ளார் என்றும், அவ்வாறு கிரையம் ஏற்படுத்த 1ம் எதிர்மனுதாரருக்கு எவ்வித உரிமையும் இல்லை என்றும், 2ம் எதிர்மனுதாரர் 1ம் எதிர்மனுதாரின் மகன் என்றும், அவர் 1,3 எதிர்மனுதாரர்களுடன் சேர்ந்துக் கொண்டு மனுச் சொத்திலிருந்து மனுதாரரை வெளியேற்ற முயற்சி செய்கிறார் என்றும், எனவே எதிர்மனுதாரர்களுக்கு எதிரா இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தாக்கல் செய்த எதிர் வழக்குரை:**

உண்மையில், மனுச் சொத்து சிட்டுப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் அவருக்கு அவரது தகப்பனாரான ராமு என்பவரின் மூலம் கிடைக்கப்பெற்ற சொத்து என்றும், அது குறித்து செட்டில்மென்ட் பதிவேட்டிலும், ரீ செட்டில்மென்ட் பதிவேட்டில் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றும், 1ம் எதிர்மனுதாரரான சிலம்பக்கோனார் மேற்படி சிட்டுப்பிள்ளையின் ஒரே வாரிசு ஆவார் என்றும், 1ம் எதிர்மனுதாரரிடம் இருந்து மனுச் சொத்தை வாதியின் தந்தை கலிபுல்லா கடந்த 24.08.1992ல் தகுந்த மறுபயனுக்கு கிரையம் பெற்றுள்ளார் என்றும், அது முதல் மனுச் சொத்தில் யாருடைய குறுக்கீடும் இன்றி கலிபுல்லா அனுபவம் செய்து வந்தார் என்றும், மேற்சொன்ன கலிபுல்லா கடந்த 05.10.20007ம் தேதியில் வாதிகளை வாரிசுகளாக விட்டுவிட்டு இறந்துவிட்டார் என்றும், வாதிகள்

மனுச் சொத்தை வாரிசு கிரமப்படி அடைந்து யாருடைய குறுக்கீடும் இன்றி அனுபவம் செய்து வந்தார்கள் என்றும், கஜா பியலின் போது மனுச் சொத்தில் இருந்த 25 தென்னை மரங்களும் சாய்ந்து விட்டதால் தண்ணீர் பற்றாக்குறை காரணமாக கருவேல மரங்கள் மனுச் சொத்தில் இருந்ததாகவும், அதை மனுதாரர் சாதகமாக எடுத்துக் கொண்டு அவரது பெயருக்கு சான்றிதழ்கள் தயார் செய்துக் கொண்டு கடந்த 23.04.2015ம் தேதி தான செட்டில்மென்ட் பத்திரத்தை மோசடியாக ஏற்படுத்திக் கொண்டார் என்றும், மனுச் சொத்தில் மனுதாரர் எந்த காலத்திலும் அனுபவம் செய்து வந்தது இல்லை என்றும், எனவே மனுதாரரின் இம்மனுவை செலவு தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டி எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனுதாரர் தரப்பு ஆவணங்களாக ம.சா.ஆ1 முதல் ம.சா.ஆ 5 வரை குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பு ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

2. இம்மனுவில் தீர்வுக்குரிய பிரச்சனை என்னவென்றால் இம்மனு அனுமதிக்கத்தக்கதா இல்லையா என்பதேயாகும்.

**3. பிரச்சனைக்கான தீர்வு**

1) இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. மனுதாரர்கள் /வாதிகள் தரப்பில் இந்த மனுவும் மனுச் சொத்தை எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளோ அவர்வகை ஆட்களோ, ஏஜெண்டுகளோ தடை,தகராறு செய்யக் கூடாது என இந்த அசல் வழக்கு முடியும் வரை அவர்களுக்கு எதிராக இடைக்கால தடையாணை பரிகாரம் வழங்க வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) மேலும், மனுதாரர் தரப்பில் மனுச் சொத்து சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவர் கடந்த 2015 ம் ஆண்டு அவரது மகளான வாதிக்கு 2015ல் ஏற்படுத்திக் கொடுத்துள்ளார் என்றும், அதனடிப்படையில் வாதி தாவா சொத்தின் அனுபவத்தில் இருந்து வருகிறார் என்றும், கூறப்பட்டு ம.சா.ஆ 1 முதல் 5 வரையிலான ஆவணங்கள் குறியீடு

செய்யப்பட்டுள்ளன.

3) எதிர்மனுதாரர் தரப்பில், மனு சொத்தானது ஆதியில் ராமு மகள் சிட்டுப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டு அவரது அனுபவத்தில் இருந்து வந்த சொத்து என்றும், மேற்படி சிட்டுப்பிள்ளை, பெரிய கோனார் தம்பதியர்களின் ஒரே வாரிசான சிலம்பக் கோனார் எனப்வரிடமிருந்து தகுந்த மறு பயனுக்கு வாதியின் தந்தை கிரையம் பெற்றுள்ளார் என்றும், அது முதல் தாவா சொத்தை வாதிகள் அனுபவம் செய்து வருவதாகவும், கூறப்பட்டு அதற்கு ஆதரவாக மனுதாரர் தரப்பில் ம.சா ஆ 1 முதல் ம.சா.ஆ 11 வரையிலான ஆவணங்கள குறியீடு செய்யப்பட்டுள்ளன.

4) மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் மனுச் சொத்தை சிட்டுப்பிள்ளை, பெரியன்ன கோனார் ஆகியோரின் வாரிசான சிலம்பக்கோனாரிடம் இருந்து கிரையம் பெறப்பட்டுள்ளது என்பது தெரியவந்தாலும், மனுச் சொத்து ஆதியில் ராமு மகள் சிட்டுப்பிள்ளை என்பவருக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டு அதற்கு ஆதரவாக மனுச் சொத்தைப் பொறுத்து சிட்டுப்பிள்ளை என்பவர் பெயரில் செட்டில்மென்ட் Register ஏற்பட்டுள்ளதாக எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி செட்டில்மென்ட் Register ல் மனுச் சொத்தின் உரிமையாளர் என்ற இடத்தில் ராமு பிள்ளை மகன் சிட்டுப்பிள்ளை என குறிப்பிடப்பட்டுள்ளதை பார்க்கும் பொழுதும் மேலும் மேற்படி சிட்டுப்பிள்ளை என்பவர் ராமு என்பவரின் மகள் என்பதைக் குறித்து காட்டு்ம்வாரிசு சான்று எதுவும் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யாததததை பார்க்கும் பொழுதும்,, மேற்படி எதிர்மனுதாரர் தரப்பில் கூறப்படுவது போல் மேற்சொன்ன ராமு என்பவரின் மகளான சிட்டுப்பிள்ளை என்பவரின் வாரிசிடம் இருந்து, வாதியின் தகப்பனார் கிரையம் பெற்றதன் மூலம் அவரது வாரிசுகளான வாதிகளுக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதைக் குறித்து தகுந்த ஆவண சாட்சியங்கள் மூலம் நிரூபிக்கும் விதமாகவும், மேலும் மனுதாரர் தரப்பில் மனுச் சொத்து சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவருக்கு பாத்தியப்பட்டதாக கூறப்பட்டுள்ள நிலையில், மேற்படி சிட்டுப்பிள்ளை என்கிற வெள்ளையம்மாள் என்பவர் ஒரே நபர் என்பதைப் பொறுத்து நிரூபிக்கும் விதமாகவும் , இருதரப்பிலும் வழக்கு விசாரணையின் போது தாக்கல் செய்யப்படும் ஆவணங்கள் மற்றும் சாட்சியங்களின மூலம் மட்டுமே தெளிவாக தீர்வு காண இயலும் என இந்நீதிமன்றம்

கருதுவதால் மனுதாரர் மனுவில் கோரியுள்ள பரிகாரம் வழங்குவது உசிதமாக இருக்காது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

முடிவாக இம்மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு ஆகஸ்டு திங்கள் 04–ம் நாள் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப்பகரப்பட்டது.

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.08.04 15:33:42 +0530

ஒம்/–எம்.சாதத்துனிஷா,

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:**

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | –– | தாவா சொத்துக்கான செட்டில்மென்ட் பதிவு அசல் ஆவணம்– உண்மை நகல் |
| ம.சா.ஆ.2 | 23.04.2015 | தாவா சொத்தை சிட்டு பிள்ளை (எ) வெள்ளையம்மாள் நல்லம்மாளுக்கு எழுதிக் கொடுத்த இனாம்செட்டில்மென்ட் பத்திரம்–அசல் |
| ம.சா.ஆ.3 | ––– | வாதியின் பெயரிலான கணினி சிட்டா – உண்மை நகல் |
| ம.சா.ஆ.4 | ––– | தாவா சொத்திற்கான வாதி பெயரில் உள்ள அடங்கல் – உண்மை நகல் |
| ம.சா.ஆ.5 | 24.08.1992 | தாவா சொத்தை சிலம்பக்கோனார் சையது முகமதுக்கு எழுதிக் கொடுத்த கிரையப் பத்திரத்திரத்தின் சான்றிட்ட நகல் |

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி – இல்லை

**எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்: இல்லை**

M SATHATHUNISHA

Digitally signed by M SATHATHUNISHA
Date: 2025.08.04 15:33:55 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல்
நீதித்துறை நடுவர், இலுப்பூர்.